சுருக்கம்

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலம் – கல்வி நிலையங்களுடன் இணைந்துள்ள விடுதிகளில் தங்கிப்பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ, மாணவியருக்கு கல்வி உதவித்தொகை திட்டத்தின் கீழ் தற்போதைய மாதாந்திர உண்டி, உறையுள் கட்டணங்களை உயர்த்தி வழங்கி ஆணை வெளியிடப்படுகிறது.

---

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நலத்(சிந2)துறை

அரசு ஆணை (நிலை) எண். 86

நாள். 15.10.2013
விஜய, புரட்டாசி 29
திருவள்ளுவர் ஆண்டு 2044

படிக்க:

1) அரசு ஆணை நிலை எண்.59, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை, நாள்.6.6.2000.
2) அரசு ஆணை நிலை எண்.47, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை, நாள்.16.5.2005.
3) முதன்மைச் செயலர்/பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையரின் கடித எண்.டி1/2302/2013, நாள் 07.05.2013.

.....

ஆணை:

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் அவர்கள் இத்துறையின் 2013–14 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கையின் போது புதிய அறிவிப்புகளில் கீழ்க்கண்ட புதிய அறிவிப்பினை அறிவித்துள்ளார்கள்:

> “கல்வி நிலையங்களுடன் இணைந்துள்ள விடுதிகளில் தங்கிப்பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ, மாணவியருக்கு கல்வி உதவித்தொகை திட்டத்தின் கீழ் தற்போது மாதந்தோறும் வழங்கப்படும் உண்டி, உறையுள் கட்டணத்தை தொழிற் கல்வி படிப்புகளுக்கு ரூ.75/– முதல் ரூ.140/– என்பதை ரூ.350/– ஆகவும், ஐடிஐ/பட்டப்படிப்பு மற்றும் முதுகலைப் படிப்புகளுக்கு ரூ.75/– முதல் 90/– என்பதை ரூ.225/– ஆகவும், 11, 12–ஆம் வகுப்பு மற்றும் இளங்கலை படிப்புகளுக்கு ரூ.75/–முதல் ரூ.80/– என்பதை ரூ.175/– ஆகவும் உயர்த்தி வழங்கிடவும், இதன்படி 44,961 மாணவ, மாணவியருக்கு உயர்த்தப்பட்ட விகிதத்தில் உண்டி, உறையுள் கட்டணங்களை வழங்குவதற்கு இந்நிதியாண்டில் 9 கோடியே 75 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும் எனவும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.”

2. தற்போது கல்லூரிகளுடன் இணையப்பெற்ற விடுதிகளில் தங்கிப்பயிலும் மிகப்பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படியும், பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட

அரசாணையின்படியும், பின்வரும் விகிதப்படி உண்டி, உறையுள் கட்டணங்கள் வழங்கப்பட்டு வருகின்றன:

<u>மிகப்பிற்படுத்தப்பட்டோர் / சீர்மரபினர் மாணவர்களுக்கு வழங்கப்படும் தொகை</u>

| விவரம் | உண்டி / உறையுள் கட்டணம் (ஒரு மாதத்திற்கு) ரூ. |
|---|---|
| தொழிற்கல்வி | 140 |
| பட்டயப்படிப்பு | 90 |
| அறிவியல் பட்டம் மற்றும் பட்ட மேற்படிப்பு | 90 |
| +1 மற்றும் +2, இளங்கலை | 80 |

<u>பிற்படுத்தப்பட்டோர் மாணவர்களுக்கு வழங்கப்படும் தொகை</u>

| விவரம் | உண்டி / உறையுள் கட்டணம் (ஒரு மாதத்திற்கு) ரூ. | |
|---|---|---|
| | சென்னை மாவட்டம் | இதர மாவட்டங்கள் |
| தொழிற்கல்வி | 75 | 60 |
| கலை, அறிவியல் மற்றும் சட்டம் | 75 | 60 |
| தொழிற்பயிற்சி | 75 | 60 |

3. கல்லூரிகளுடன் இணையப்பெற்ற விடுதிகளில் தங்கிப்பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவர்களுக்கும் கல்வி உதவித்தொகை திட்டத்தின் கீழ் உண்டி, உறையுள் கட்டணங்களை உயர்த்தி வழங்கும் பட்சத்தில் 44961 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவர்கள் பயனடைவர் எனவும், இதனால் அரசுக்கு பின்வருமாறு கூடுதல் செலவினம் ஏற்படும் எனவும் பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர் தெரிவித்துள்ளார்:

<u>பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் / சீர்மரபினர் மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகையுடன் உயர்த்தி வழங்க பரிந்துரைக்கப்படும் மாதாந்திர உண்டி, உறையுள் கட்டணம்:</u>

| விவரம் | உண்டி / உறையுள் கட்டணம் (ஒரு மாதத்திற்கு) ரூ. |
|---|---|
| தொழிற்கல்வி | 350 |
| பட்டயப்படிப்பு | 225 |
| பட்ட மேற்படிப்பு | 225 |
| +1 மற்றும் +2, இளங்கலை(பட்டப்படிப்பு) | 175 |

| துறை | மாணவர் எண்ணிக்கை | கூடுதல் செலவினம் (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை | 26977 | 641.21 |
| மிகப்பிற்படுத்தப்பட்டோர் / சீர்மரபினர் நலத்துறை | 17984 | 333.64 |
| மொத்தம் | 44961 | 974.85 |

4. பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையரின் செயற்குறிப்பினை அரசு நன்கு கவனமுடன் பரிசீலினை செய்து, அதனை ஏற்று, கல்வி நிலையங்களுடன் இணைந்துள்ள விடுதிகளில் தங்கிப் பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இன மாணவ, மாணவியருக்கு கல்வி உதவித் தொகை திட்டத்தின் கீழ் தற்போது மாதந்தோறும் வழங்கப்படும் உண்டி, உறையுள் கட்டணத்தை 44961 பிற்படுத்தப்பட்டோர் / மிகப்பிற்படுத்தப்பட்டோர் / சீர்மரபினர் மாணவ, மாணவியர் பயனடையும் வகையில் ரூ.9,74,85,000/– (ரூபாய் ஒன்பது கோடியே எழுபத்து நான்கு இலட்சத்து எண்பத்து ஐந்து ஆயிரம் மட்டும்) கூடுதல் செலவினத்தில் உயர்த்தி வழங்கி அரசு ஆணையிடுகிறது. இந்த கூடுதல் செலவினம் குறித்த விவரம் இவ்வாணையின் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

5. மேலே பத்தி 4–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்கு தலைப்புகளின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

<u>பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை</u> (ரூ.6,41,21,000/–)

2225 – ஆதி திராவிடர், பழங்குடியினர் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் 03 – பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 277 – கல்வி – பன்னிரெண்டாம் ஐந்தாண்டுத் திட்ட பணிகள் – II மாநிலத் திட்டம் – JF மெட்ரிகுலேசனுக்கு மேற்பட்ட வகுப்புகளில் பயிலும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர்களுக்குப் படிப்புதவித் தொகை – 12 – படிப்புதவித் தொகைகளும் பயிற்சி உதவித்தொகைகளும் – 09 – ஏனையவை
(த.தொ.கு 2225–03–277–JF 1294)

<u>மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை</u> (ரூ.3,33,64,000/–)

2225 – ஆதி திராவிடர், பழங்குடியினர் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் 03 – பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 277 – கல்வி – பன்னிரெண்டாம் ஐந்தாண்டுத் திட்ட பணிகள் – II மாநிலத் திட்டம் – KF மெட்ரிகுலேசனுக்கு மேற்பட்ட வகுப்புகளில் பயிலும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர்களுக்குப் படிப்புதவித் தொகை – 12 – படிப்புதவித் தொகைகளும் பயிற்சி உதவித்தொகைகளும் – 09 – ஏனையவை
(த.தொ.கு 2225–03–277– KF 1293)

6. மேலே பத்தி 4–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் ஒரு "புது துணைப் பணி" குறித்த செலவினமாகும். நாளடைவில் இதற்கு சட்டமன்ற பேரவையின் ஒப்புதல் பெறப்படும். சட்டப் பேரவையின் ஒப்புதல் பெறப்படுவதை எதிர்நோக்கி முதலில் எதிர்பாரா செலவு நிதியிலிருந்து இச்செலவினம் மேற்கொள்ளப்படும். இதற்கான முன்பணத்தை அனுமதிக்கின்ற ஆணைகள் நிதி(வ.செ.பொது–I)த் துறையில் தனியே வெளியிடப்படும். எதிர்பாரா செலவு நிதியிலிருந்து தேவையான தொகையை முன்பணமாக வாங்குவதற்கு விண்ணப்பத்தினை உரிய படிவத்தில் பூர்த்தி செய்து இவ்வரசாணையின் நகலுடன் நிதி(வ.செ.பொது–I)த் துறைக்கு விண்ணப்பிக்குமாறு பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் ஆகியோர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேலும் 2013–14–ம் ஆண்டுக்கான இச்செலவினத்தை துணை மானிய

கோரிக்கையில் சேர்ப்பதற்குரிய விளக்க குறிப்பினை உரிய தருணத்தில் நிதி (வ.செ.பொது–I/பிமிபி(ப)சிந) துறைக்கு அனுப்பி வைக்குமாறும் பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் ஆகியோர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

7. இந்த அரசாணை நிதித்துறையின் ஒப்புதலை அதன் அ.சா.எண்.56795/பிமிபி/2013, நாள்.15.10.2013–ல் பெற்று வெளியிடப்படுகிறது. கூடுதல் நிதியொதுக்க பேரேடு எண்.1629 [ஆயிரத்து அறுநூற்று இருபத்தொன்பது]

(ஆளுநரின் ஆணைப்படி)

க. அருள்மொழி,
அரசு முதன்மைச் செயலர்.

பெறுநர்
பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர், சென்னை–5.
மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர், சென்னை – 5.
மாநில கணக்காயர், சென்னை–18/9.
மாநில கணக்காயர் (தணிக்கை I), சென்னை –6.
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை –5.

<u>நகல்</u>
முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
நிதித்(பிமிபி/வ.செ.பொது–I /வ.செ.பொது–II)துறை, சென்னை –9.
இருப்புக் கோப்பு/உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

15/10/2013.
பிரிவு அலுவலர்.

## இணைப்பு

**அரசு ஆணை (நிலை) எண்.86, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்(சிந2)துறை, நாள்.15.10.2013**

**கல்வி நிலையங்களுடன் இணைந்து விடுதிகளில் தங்கிப் பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ, மாணவியருக்கு கல்வி உதவித்தொகைத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் உண்டி, உறையுள் கட்டணத்தை உயர்த்துவதால் ஏற்படும் கூடுதல் செலவின விவரம்**

| பிரிவு | மாணவர்கள் | தற்போது வழங்கப்பட்டு வரும் தொகை | வழங்கப்படவுள்ள தொகை | வித்தியாசம் | ஒரு மாதத்திற்கு வழங்கப்படவுள்ள தொகை | 10 மாதங்களுக்கு வழங்கப்படவுள்ள தொகை |
|---|---|---|---|---|---|---|
| | | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. |
| பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை | | | | | | |
| தொழிற் கல்வி | 20412 | 75 | 350 | 275 | 56,13,300 | 5,61,33,000 |
| 11, 12–ஆம் வகுப்பு மற்றும் இளங்கலை படிப்பு | 3600 | 75 | 175 | 100 | 3,60,000 | 36,00,000 |
| டிப்ளமோ / பட்டயப்படிப்பு | 1765 | 75 | 225 | 150 | 2,64,750 | 26,47,500 |
| முதுகலை படிப்பு | 1200 | 80 | 225 | 145 | 1,74,000 | 17,40,000 |
| மொத்தம் | 26977 | | | | 64,12,050 | 6,41,20,500 |
| மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை | | | | | | |
| தொழிற் கல்வி | 13608 | 140 | 350 | 210 | 28,57,680 | 2,85,76,800 |
| 11, 12–ஆம் வகுப்பு மற்றும் இளங்கலை படிப்பு | 2400 | 90 | 175 | 85 | 2,04,000 | 20,40,000 |
| டிப்ளமோ / பட்டயப்படிப்பு | 1176 | 90 | 225 | 135 | 1,58,760 | 15,87,600 |
| முதுகலை படிப்பு | 800 | 80 | 225 | 145 | 1,16,000 | 11,60,000 |
| மொத்தம் | 17984 | | | | 33,36,440 | 3,33,64,400 |
| நிகர மொத்தம் | **44961** | | | | | **9,74,85,000** |

க. அருள்மொழி,
அரசு முதன்மைச் செயலர்.

/உண்மை நகல்/

15/10/2013.
பிரிவு அலுவலர்.